மாண்புமிகு திரு. மா.முத்துசாமி : கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் தனியாக இயங்கும் அகில இந்திய அமைப்பு. அது பணத்தைக் கொடுக்கிறது, மானியமாகவும், கடனாகவும். அந்த வாரியம் இந்தவிதமான உதவி கொடுப்பதாகத் தெரியவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கிசான் ராட்டையில் நூற்கும் நூலும், அம்பர் ராட்டை நூலும் வித்தியாசமாக இருக்கிறது. இரண்டையும் கலந்து கதர் நெய்வதால், தரம் குறைகிறது. தரம் உயர, வலிவு அதிகமாக, கிசான் ராட்டைகளையே கொண்டுவருவதன் மூலம் கதர் உற்பத்தி செய்கிற சிறு தொழில் நசிக்காமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை அரசு உணருகிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது ஒரு தவறான கருத்து. உற்பத்தி செய்வது மேலும் அதிகமாகும். பலருக்கும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். கிசான் ராட்டை மூலம் நூற்பதைவிட டெக்ஸ்டூல் ராட்டை மூலம் நூற்பதில் மூன்று மடங்கு அதிகமாக ஊதியம் பெற வாய்ப்பு இருக்கிறது. வேலை அதிகரிக்க, மார்க்கெட்டில் போட்டி போட, நாம் புதுமைகளைக் கையாள வேண்டியதாக இருக்கிறது.

தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி

337 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் நிர்வாக குழுவில் அந்த வங்கியின் ஊழியர் ஒருவரை பிரதிநிதியாக சேர்க்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிர்வாகக் குழுவில் அங்கு பணியாற்றும் ஊழியர் ஒருவரை நியமிப்பது வங்கிக்கு வசதியாக இருக்கும் என்பதை அரசாங்கம் யோசனை செய்து சேர்த்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அப்படி ஊழியர்களை நியமிப்பதற்கு சட்டத்திலும் விதிகளிலும் இடம் இல்லை.

Tirunelveli District Co-operative Society, Tuticorin

* 338 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Joint Registrar of Co-operative Societies, Tirunelveli had addressed in June 1968 the President of the Tirunelveli District Co-operative Society Limited, Tuticorin to take action on grave financial irregularities in its working; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) இந்தச் சங்கத்தின் தலைவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், இது நீதி விசாரணையில் உள்ளது.